வட.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 27/2019

எனது இல - **NP/07/10/02/159**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
யாழ்ப்பாணம்.
*22.11.2019*

**பிரதம செயலாளர்,**
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
**வடக்கு மாகாணம்.**

## மாகாண பொது முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவியின் தரம் I ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2015 (I) 2019

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்டதும் 02.04.2013ம் திகதியிலிருந்து செயல்வலுவிலுள்ளதுமான வடக்கு மாகாண பொது முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 8 மற்றும் பந்தி 15 ஆகியவற்றினது ஏற்பாடுகள், இடைக்கால ஏற்பாடுகள், இணைப்பு 6 இலுள்ள ஏற்பாடுகள் மற்றும் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாக மாகாண பொது முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவியின் தரம் Iஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையானது செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அவர்களால் ***2020 தை மாதம்*** யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். போதிய அளவிலான விண்ணப்பங்கள் கிடைக்காமை அல்லது வேறு காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்செய்யும் அதிகாரம் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு உண்டு.

*2.0* **தகைமைகள் :**
விண்ணப்ப முடிவுத் திகதியில் அல்லது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவியின் தரம் Iற்கு பதவியுயர்வு பெற்றுள்ள அலுவலர்களும் இதுவரை இப்பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத தரம் I அலுவலர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.

***குறிப்பு :- நடைமுறையிலுள்ள வடக்கு மாகாண பொது முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக்குறிப்பின் திருத்தம் 02ன் பந்தி 03, 04ற்கு அமைவாக குறித்த சேவையின் நியமன அதிகாரியான பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் அவர்களினால் நடாத்தப்படும் 10 நாள் பயிற்சிநெறியினைப் முழுமையாகப் பூரணப்படுத்திய அலுவலர்கள் இவ்வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையிற்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை.***

*3.0* ***விண்ணப்பப் படிவம்*** :

- விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படவேண்டிய இறுதித்திகதி **2019.12.20** ஆகும்.
- விண்ணப்பமானது இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாகத் தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர் ஊடாக ***“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.”*** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

*4.0* ***பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:-*** பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் இலங்கைக் கடவுச்சீட்டு (Passport)
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் (Driving License)

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

*5.0* ***விண்ணப்பங்கள் :-***

- இல *1* முதல் *6* வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனைய பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் A4 அளவினதான தாளில் விண்ணப்பமானது கணினியில் தயார் செய்யப்பட்டு பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்து மூலம் சரியாகவும், தெளிவாகவும் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.
- விண்ணப்பப் படிவமானது இத்துடன் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயார் செய்து விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் முன்னோட்டப் பிரதி என்பன அனுப்பிவைத்தலாகாது என அறிவுறுத்தப்படுகின்றது.
- மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும்.
- தரப்பட்டுள்ள பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கூடிய கவனம் எடுத்தல் வேண்டும் என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

*6.0* ***பரீட்சைக் கட்டணம்:-***

*6.1* முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக்கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

*6.2* ஏனைய பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா *250*ஐயும் ஒன்றிற்கு மேற்பட்ட பாடங்களிற்குத் தோற்றுவதாயின் ரூபா *500*ஐயும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகமொன்றிலும் செலுத்தி, காசுக்கட்டளையினை "**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்**" என்ற பெயருக்கு **யாழ்ப்பாணத் தபால் அலுவலகத்தில்** மாற்றக்கூடியவாறு பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

*6.3* விண்ணப்பதாரி காசுக்கட்டளையின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் முடியாது.

*7.0* விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு வடக்குமாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தங்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் *3* நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் பின்வரும் விபரங்களுடன் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

- கோரிக்கைக் கடிதம்,
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி,
- பணம் செலுத்திய காசுக்கட்டளையின் உறுதிப்படுத்திய பிரதி,
- விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், திகதி,
- அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய தொலைநகல் இலக்கம் (Fax No).

**குறிப்பு :- விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதியட்டை அனுப்புதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதலாகாது.**

*08.0* இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர்களுக்கு, பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்களால் தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XIIன் பிரிவு *19*ற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

*09.0* உத்தியோத்தர்கள் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது *(40%)* வீதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

10.0 பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினது பெறுபேறுகளும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும்.

**11.0 பாடத்திட்டம்.**

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| **1. தாபன நடைமுறை மற்றும் நடைமுறை விதிகள்**<br>**பாட இல : 01**<br>நேரம் : 1½ மணித்தியாலங்கள்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் என்பதுடன், ஒரு பகுதியானது அலுவலக முறைமையின் அடிப்படை அறிவு, அவற்றின் முக்கியத்துவம், எழுத்து மூலத் தொடர்பாடல், ஆவணப்படுத்தல் மற்றும் தொகுப்பு மாதிரிகள் மற்றும் அலுவலகச் செயற்பாடுகள் போன்றன தொடர்பில் பெற்றுக்கொண்ட அனுபவத் தேர்ச்சியினைப் பரிசோதிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். ஏனைய பகுதியானது அரசாங் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் தொகுதி I மற்றும் தொகுதி II ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலான நடைமுறை அறிவினைப் பரிசோதிப்பதற்கான வினாக்களை உள்ளடக்கும். |
| **2. அரசநிதி முகாமைத்துவம்**<br>**பாட இல : 02**<br>நேரம் : 1½ மணித்தியாலங்கள்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | நிதிக் கட்டுப்பாடு, அரச நிதிப் பாதுகாப்பு, வருமானம் மற்றும் கொடுப்பனவு, வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள், வழங்கல் மற்றும் சேவைகள் (பொருட் கணக்கெடுப்பு மற்றும் களஞ்சியக்காப்பு, நிதிப் பிரமாணங்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் அடிப்படை வங்கியியல் நடைமுறை பற்றிய அடிப்படை அறிவு எதிர்பார்க்கப்படுகிறது) போன்ற அரச திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் அமைச்சுக்களிலுள்ள விடயங்களில் பரீட்சார்த்திகளின் அறிவினைப் பரிசோதிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| **3. தற்காலப் போக்குகள்**<br>**பாட இல : 03**<br>நேரம் : 1 மணித்தியாலம்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | தற்கால உள்நாட்டு மற்றும் சர்வதேச நிகழ்வுகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவினைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட ஒரு பகுதி மற்றும் அலுவலக முகாமை தொடர்பான புதிய போக்குகள், அரச துறையினது சேவை வழங்கல் மற்றும் நல்லாட்சி தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவினைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட ஒரு பகுதி என்பவற்றை இவ்வினாத்தாள் உள்ளடக்கும். பல்தேர்வு வினாக்கள் மற்றும் அரைவாசி கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையான வினாக்களை இவ்வினாத்தாள் உள்ளடக்கும். |

12.0 இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினைத் தங்கள் அமைச்சின் / திணைக்களங்களின் /அலுவலகத்தின் கீழ்க் கடமையாற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குத் தெரியப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் இத்தகவல்களை வடமாகாண இணையத்தளமான www.np.gov.lk எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

**கவனிக்கவும் :-** இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும் என்பதுடன் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலங்களில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் தமிழ் மொழியே மேலோங்குதல் வேண்டும்.

***அ.சிவபாலசுந்தரன்,***
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.